14.02.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.61/2022**

**பி.வா.சா.1–சத்யமூர்த்தி, த/பெ.முத்துசாமி**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

01.07.2023 ம் தேதியிலிருந்து ஆலத்துடையான்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். பி.வா.சா.ஆ.1 அறிக்கை எனக்கு முன்பிருந்த விஏஓ–ஆல் தயார் செய்யப்பட்டது. அது சம்மந்தமாக எங்கள் அலுவலகத்தில் பொதுமக்களை விசாரித்ததாக எந்த கோப்பிலும் பதிவு செய்யவில்லை. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு பொதுமக்களை விசாரித்தேன். நான் விசாரித்ததாக எந்த வாக்குமூலமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

02. இறந்துபோன சேவுகனின் பெற்றோர்கள் பற்றி பி.வா.சா.ஆ.1 அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சேவுகனின் பெற்றோர்கள் பற்றி சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். ஏற்கனவே விசாரித்த கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் அடிப்படையில்

14.02.2025



நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் பொதுமக்களை விசாரித்து தான் சாட்சியம் அளிக்கிறேன். ஏற்கனவே இருந்த கிராம நிர்வாக அலுவலர் கணேசன் என்பவருக்கும், 4ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட விரோதம் காரணமாக பொய்யாக அறிக்கை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

03. இறந்துபோன சேவுகன் என்பவருக்கு 4ம் பிரதிவாதியின் தாயார் மட்டுமே சட்டப்படியான மனைவி முதலச்சி என்று சொன்னால் சரியல்ல. முதலச்சி இறந்தபிறகு அவரது சகோதரி தங்காள் என்பவரை திருமணம் முடித்ததாக சாட்சி கூறுகிறார். முதலச்சிக்கு உடன்பிறந்த சகோதரியே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.